PUIG

# Puig
# நெறிமுறைக் குறியீடு

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிறுவனச் செய்தி | 4 |
| இந்த நெறிமுறைக் குறியீடு குறித்த அறிமுகம் | 7 |
| நோக்கம் | 8 |
| குறிக்கோள் | 8 |
| ஏன் நெறிமுறைக் குறியீடு? | 8 |
| நெறிமுறைக் குறியீடு மற்றும் தனித்திறன் | 9 |
| எங்களது மதிப்புகள் | 10 |
| Puig மற்றும் நீடிப்புத்தன்மை | 11 |
| Puig மற்றும் மக்கள் | 13 |
| Puig மற்றும் வணிகம் | 15 |
| பயன்பாடு மற்றும் புகாரளிக்கும் சேனல் | 19 |
| மேலாளர்களின் பங்கு | 22 |
| நெறிமுறைக் குறியீட்டின் சீராய்வு | 23 |



# நிறுவனச் செய்தி

நான் அடிக்கடி இதைக் கேட்டிருக்கிறேன், நிறுவனத்தின் உள்ளேயும் வெளியேயும், அதாவது Puig தனித்துவமான வழியில் செயல்களை மேற்கொள்கிறது, அதுதான், Puig வழி. எங்களது கலாச்சாரம் தனித்துவமானது என்று நான் நம்புகிறேன் ஏனெனில் அதன் வரலாறு முழுவதும், தலைமுறை தலைமுறையாக மதிப்புகளைத் திடமாகத் தக்கவைத்த ஒரு குடும்பத்தால் வழிநடத்தப்பட்டு வந்துள்ளது; Puig அதன் தொழிலை நடத்துகிற வழி வெளிப்படுத்தப்பட்டுள்ள மதிப்புகள். மேலும் கடந்த பதிமூன்று ஆண்டுகளுக்கும் மேலாக, நெறிமுறைக் குறியீடானது இக்கலாச்சாரத்தை வெளிப்படுத்தி வழிநடத்தியுள்ளது, நமது தினசரி வேலையைச் செய்கையில் மனதில் கொள்ள வேண்டிய மதிப்புகள், முன்னுரிமைகள் மற்றும் பகிர்ந்த கோட்பாடுகளைத் தெளிவாக வரையறுத்துள்ளது. நாங்கள் முதலில் 2007 -இல் நெறிமுறைக் குறியீட்டில் வேலை செய்யத் தொடங்கினோம், 2010 -இல் அதனை அறிமுகப்படுத்தினோம். இப்போது எங்களது புதிய குறிக்கோள்களுடன் சீரமைத்து இந்தத் திருத்திய பதிப்பை வெளியிடுகிறோம்.

2014 இல், எங்களது 100 -வது ஆண்டுவிழாவின் போது, நாங்கள் இன்னும் மேலும் பொறுப்புள்ள நிலைக்கத்தக்க நிறுவனமாக ஆவதற்கான அர்ப்பணிப்பு கொண்ட எங்களது மரபைக் கௌரவிக்கிறோம். 2020 -க்குள், 2014 -இல் நாம் நாமாகவே அமைத்துக்கொண்ட அனைத்துக் குறிக்கோள்மிக்க இலக்குகளையும் அடைந்து, நமது திட்டங்களைத் தொடர்ந்து புதுப்பித்தோம், மேலும் 2021 -இல் நமது 2030 ESG செயல்நிரலை வெளியிட்டோம். இதுதான் வருகின்ற ஆண்டுகளுக்கான நமது சாலை வரைபடம், இது அனைத்து மூன்று ESG பரிமாணங்களிலும் உள்ள சவால்மிக்க குறிக்கோள்களையும் உள்ளடக்குகிறது; சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுமை. நமது செயல்நிரல் சட்டத் தேவைகளுக்கும் அப்பால் செல்கிறது, மிகவும் வேண்டப்படுகிற சர்வதேச தரநிலைகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளது, இதனாம் நம்மால் UN நிலைக்கத்தக்க வளர்ச்சி குறிக்கோள்களுக்கான (SDGs) நமது பங்களிப்பை அதிகரிக்க முடிகிறது.

நமது நிறுவனத்திற்குப் பின்னால் உள்ள குடும்பம் ESG தொடர்பான சிக்கல்கள் தொடர்பாக நமது தொழிற்துறையை மிகவும் மதிக்கப்படும் குழுக்களில் ஒன்றாவதற்கு நமக்கு சாசனத்தை அளித்துள்ளது. இதனால்தான் இதுவரை அல்லாத அளவிற்கு Puig

நெறிமுறைக் குறியீட்டையும் அதன் பண்பாண்மையையும் வாசித்து, புரிந்துகொண்டு, கடைபிடிக்க  இது முக்கியமானது, மேலும் Puig-ஐ எங்கேனும் எப்போதேனும் பிரதிநிதித்துவம் செய்யும்போது நமது பங்குரிமையாளர்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டும். நமது நிறுவனத்தின் மதிப்புகள் இந்த ஆவணத்தில் அமைக்கப்பட்டுள்ள அர்ப்பணிப்புகள் ஒவ்வொன்றிலும் ஒத்திசைவாகவும் தொடர்ந்தும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.



நீங்கள் பார்க்கப்போவது போல, Puig நெறிமுறைக் குறியீடானது Puig-காக வேலை செய்யும் நம் அனைவரிடம் இருந்தும் மற்றும் தொடர்புக்கு வருபவர்களிடம் இருந்தும் எதிர்பார்க்கப்படும் நடத்தைக்கு பரிந்துரைச் சட்டகத்தை நிறுவுகிறது. மேலும் இது குறியீட்டின் எந்தவொரு விதிமீறல்களையும் புகாரளிப்பதற்கு அனைத்து ஊழியர்களும் பின்பற்ற வேண்டிய செயல்முறையைத் தெளிவாக வரையறுக்கிறது. குறியீட்டுடன் நிலையாக இல்லாததாக நீங்கள் நினைத்தாலோ அல்லது நமது விதிகள் கடைபிடிக்கப்படாத சூழ்நிலை எழுந்தாலோ, நீங்கள் முன்வந்து கூறுவதற்குத் தயங்கக்கூடாது. மீறலைப் புகாரளிக்கும் எவருக்கும் இரகசியக்காப்பையும் அநாமதேய தன்மைக்கும் புகாரளிக்கும் சேனல் செயல்முறை உத்தரவாதம் அளிக்கிறது. Puig நெறிமுறைக் குறியீட்டை வாசிக்கவும், அதன் கோட்பாட்டுடன் உங்களால் முடிந்த அளவிற்கு இணங்குமாறும் உங்களை ஊக்குவிக்கிறோம். மேலும் அதற்கு உண்டான மதிப்பை அளித்ததற்கு உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சூற்றுச்சூழலைப் பாதுகாத்து, உள்ளூர் சமூகங்களை மதித்து, சமூகத்திற்கு மதிப்பை உருவாக்கி முடிந்த வரையில் மிகவும் பொறுப்புள்ள வழியில் தொடர்ந்து நடந்துகொள்ள விரும்புகிறோம். இவை அனைத்தையும் எதிர்கால தலைமுறையினருக்கு சிறந்த உலகைக் கட்டமைப்பதற்குப் பங்களிக்கும் நோக்கத்துடன் செய்கிறோம்; இது எங்களது மரபாக இருக்கும்.

மார்க் பியுக்

தலைவர் மற்றும் CEO

# இந்த நெறிமுறைக் குறியீடு குறித்த அறிமுகம்

இந்த நெறிமுறைக் குறியீடானது Puig Brands, S.A.-இன் இயக்குநர்கள் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது மற்றும் உலகில் எங்கிருக்கும் அனைத்து Puig ஊழியர்களுக்கும், எந்த விதிவிலக்குமின்றி, நிறுவனத்தில் உள்ள அனைத்து மட்டத்திற்கும் பொருந்தும்.

இது நமது செயற்பாடுகள் அனைத்திற்கும் மற்றும் நமது நிறுவனங்கள் அனைத்திற்கும் பொருந்தும்[1] மற்றும் நமது நிறுவுனர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் தங்களது சொந்த மதிப்புகளையும் அர்ப்பணிப்புகளையும் Puig -க்கு சீராக வெளிப்படுத்துவதற்கான கட்டமைப்பாகும். இந்த மதிப்புகளும் அர்ப்பணிப்புகளும் இந்த நெறிமுறைக் குறியீட்டைப் பூர்த்தி செய்கின்றன.

நம்முடன் பணிபுரியும் மூன்றாம் தரப்பினர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்கள் இந்தக் குறியீட்டிற்கு அல்லது அவர்களது சொந்த சமமானவற்றுக்கு இணங்கியிருக்க வேண்டும்.

நாம் அனைவரும் நெறிமுறைக் குறியீட்டின் உள்ளடக்கங்களைக் கட்டாயம் வாசித்துப் புரிந்துகொண்டு, அதனையும் அதன் தொடர்புடைய கொள்கைகளையும் கடைபிடிக்க தீவிரமாகப் பொறுப்பேற்க வேண்டும்.

[1] Puig Brands, S.A. நிறுவனம் மற்றும் அதன் துணைநிறுவனங்கள் மற்றும் ஸ்பானிஷ் வர்த்தகக் குறியீட்டின் சரத்து 42-க்கு ஏற்ப Puig Brands, S.A. கட்டுப்பாட்டை வைத்திருக்கின்ற அல்லது வைத்திருக்கக்கூடியவை (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) தொடர்பாக எதிர்காலத்தில் இணைக்கக்கூடிய மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது.

# நோக்கம்

நலம்பேணல், தன்னம்பிக்கை மற்றும் சிறந்த உலகிற்கான சுய-வெளிபடுத்தலை அதிகரிக்கும் குடும்ப நிறுவனத்திற்குள்ளேயே, Love Brands-இன் இல்லம்.

# குறிக்கோள்

- *பேரார்வம்*
- *மக்கள்*
- *செயல்திறன்*

# ஏன் நெறிமுறைக் குறியீடு?

Puig வலுவான மதிப்புகளால் இயக்குப்படுகிறார்கள், நீண்ட-கால பார்வை கொண்டிருக்கும் மற்றும் சிறந்த உலகைக் கட்டமைக்க அர்ப்பணிக்கும் பங்குதாரர்களைக் கொண்ட குடும்ப நிறுவனமாகும்.

2010 இல், முதல் Puig நெறிமுறைக் குறியீடு வெளியிடப்பட்டது மற்றும் நிறுவனத்தின் மதிப்புகளையும் மற்றும் Puig-இல் நாம் தொழில்செய்யும் வழியைப் பிரதிபலிக்க தொடர் தொழில் நிறுவனங்களை நிறுவியது.

இப்போது, நமது மாறும் உலகையும் மற்றும் நிறுவனத்தின் அளவு சிக்கல்தன்மையும் அதிகரிப்பதை உணர்ந்து, இந்தத் திருத்திய நெறிமுறைக் குறியீடு தலைமுறைகளாக Puig குடும்பத்தால் நிறுவனத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ள மதிப்புகளின் அடிப்படையிலான செயலுக்கு புதிய தொடர் அர்ப்பணிப்புகளையும் கோட்பாடுகளையும் அமைக்கிறது. இது நமது மதிப்புகளால் எவ்வாறு நமது நடத்தையும் முன்னுரிமைகளும் இயக்கபடுகிறது என்பதை நிர்வகிக்கிறது, ஆனால் விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் எல்லைகளால் நிர்வகிக்கப்படுகிறது.

நெறிமுறைக் குறியீடு என்பது இன்றைய உலகிற்கு நமது நிறுவனத்தின் கலாச்சாரத்தின் வெளிப்பாடாகும். இது நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் போது நாம் எப்போதும் எல்லாவற்றிலும் ஒருமைப்பாட்டுடன் நம்மை நாமே நடத்திக்

கொள்வதை உறுதிபடுத்துவதற்காக இருக்கிறது மற்றும் நமது நிறுவனத்தின் நோக்கத்திற்காக நாம் வாழும் வழியை விவரிக்கிறது.

இது நாம் யார் என்பதன் கூற்றாகும் மற்றும் உலகம் முழுவதும் Puig எவ்வாறு பார்க்கப்பட விரும்புகிறோம் என்பதை விவரிக்கிறது..

# நெறிமுறைக் குறியீடு மற்றும் தனித்திறன்

ஒரு நிறுவனமாக நமது வெற்றிக்கு Puig இல் பணிபுரியவும், எங்களுடன் தங்களது வாழ்க்கைத் தொழிலை கட்டமைக்கவும் தேர்வுசெய்த திறமையானவர்களுக்கு எப்போதும் நன்றி. புதிய சவால்கள் தோன்றுகையில், உலகில் என்ன நடக்கிறது என்பதைக் கேட்டு, நிறுவனத்திற்குள் புதிய, பன்முக கண்ணோட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

நெறிமுறைக் குறியீட்டின் இந்தப் புதிய பதிப்பானது நிலைக்கத்தக்க மாற்றத்திற்கான ஆற்றலாக விரும்பும் நிறுவனத்தின் தீர்மானத்தின் உறுதியாகும், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை முன்னிலைப்படுத்துகிறது மற்றும் பன்முகத்தன்மையின் புரிதல் மற்றும் மரியாதையளிப்பதாகும்.

நம்மைச் சிறப்பானவர்களாகச் செய்யும் கலாச்சாரத்தைப் பாதுகாக்க குறியீடு நடந்துகொள்கிறது; மக்களின் அறிந்துகொள்ளும் ஆர்வம், உற்சாகம், நியாயம் மற்றும் தொழில்முனையும் இயக்கம் ஆகியவற்றை மதித்து வெகுமதி வழங்குகிறது மற்றும் அவர்களது எதிர்காலத்திற்கு முதலீடு செய்ய விருப்பத்துடன் உள்ளது.

இக்குறியீட்டில் அமைக்கப்பட்டுள்ள மதிப்புகள், அர்ப்பணிப்புகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவை திறமையான மக்கள் Puig-இல் பணிபுரிய விழையும் நிறுவனமாகவும் மற்றும் திறமையான மக்கள் பெருமிதத்துடன் அவர்கள் சார்ந்திருக்கும் நிறுவனமாகவும் இருப்பதை உறுதிசெய்கிறது.

# எங்களது மதிப்புகள்

⊷ *தீராத அறிந்துகொள்ளும் ஆர்வம்*

நாளையை வடிவமைக்கும் வாய்ப்புகளையும் சிந்தனைகளையும் தீராது பார்த்துக்கொண்டிருத்தல், தைரியத்தை சமநிலைப்படுத்துதல் மற்றும் தனிச்சிறப்பை வழங்குவதற்கான மதிநுட்பம்.

⊷ *தொற்றும் ஊக்கம்*

மேலும் சாதனைபுரிய ஊக்குவிக்கும் மற்றும் நமது உண்மையான சுய சிந்தனைகளை வெளிப்படுத்தும் முடிவற்ற ஆற்றல், படைப்பாற்றல் மற்றும் முடியும் என்ற மனப்பாங்கு.

⊷ *நேர்மை மற்றும் மரியாதை*

எப்போதும் ஒருவொருக்கொருவர் நேர்மையுடனும், ஒருமைப்பாட்டுடனும் உபசாரம் செய்தல், நமது எல்லா ஊடாடல்களையும் வழிநடத்தும் நமது அர்ப்பணிப்புகளுக்கான வெளிப்படைத்தன்மை மற்றும் உண்மையான மரியாதை.

⊷ *தொழில்முனையும் தைரியம்*

ஒவ்வொரு பதவியில் இருந்தும் சீர்குலைக்க மற்றும் புதுமைகளை வளர்க்கும் வகையில், சுறுசுறுப்பான, செயல் சார்ந்த மற்றும் தாங்குதன்மை கொண்ட தொழில்முனைவோரை மேம்படுத்தும் நிறுவனர்கள்.

⊷ *நாளையை வடிவமைத்தல்*

நீண்ட-கால மதிப்பு உருவாக்கத்திற்கு அர்ப்பணித்தும் மற்றும் மக்கள் மற்றும் பூமி இரண்டிற்குமான நிலைக்கத்தக்க மாற்றத்தின் சக்தியாக நடந்தும், வரும் ஆண்டுகளுக்குப் பொருந்தும் மற்றும் நீடித்த மரபை விட்டுச்செல்லும் நிறுவனத்தைக் கட்டமைக்கிறது..

# அர்ப்பணிப்புகள்

## Puig மற்றும் நீடிப்புத்தன்மை

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, நாம் இயங்கும் சமூகங்களுக்கு மரியாதையளித்து மற்றும் சமூகத்திற்கு மதிப்பை உருவாக்கி நிலைக்கத்தக்க வழியில் வளர Puig உறுதிபூண்டுள்ளது.

இந்த அர்ப்பணிப்பானது நமது உலகை மாற்றுவதைக் குறிக்கோளாக கொண்ட UN நிலைக்கத்தக்க வளர்ச்சி குறிக்கோள்களுடன் (SDG) முழுமையாக சீரமைக்கப்பட்டுள்ளது. அவை ஏழ்மையை ஒழிக்க, பூமியைப் பாதுகாக்க மற்றும் அனைவரின் வாழ்க்கையையும் வாய்ப்பு வளங்களையும் எல்லா இடங்களிலும் மேம்படுத்துவதற்கான செயலுக்கான அழைப்பு.

- சுற்றுச்சூழல்

நாங்கள் சுற்றுச்சூழலை மதிக்கிறோம், பூமியையும், அதன் இயற்கை வளங்களையும் பாதுகாக்க அர்ப்பணிக்கிறோம்.

முழு மதிப்புச் சங்கிலியுலும் முழுவதுமாக எங்களது கார்பன் தடத்தைக் குறைக்க தொடர்ந்து பணியாற்றுகிறோம்.

எங்களது குறிக்கோள் உகந்த நிலைமைகளின் கீழ் எங்களது தயாரிப்புகளானது சுற்றுச்சூழல் மீதான அதன் தாக்கத்தைக் குறைக்கவும் மற்றும் சுற்றளவை உத்தரவாதம் செய்யும் வகையில் வடிவமைப்பது, உற்பத்தி செய்வது மற்றும் விநியோகிப்பது ஆகும்.

Puig சுற்றுச்சூழல் சார்ந்த இலக்குகளை நோக்கிய எங்களது முன்னேற்றத்தில் வெளிப்படையாக இருக்கவும் மற்றும் தகவல் தெரிவித்தபடி இருக்கவும் நோக்கம் கொண்டுள்ளோம்.

நாங்கள் இயங்கிவரும் நாடுகளில் பொருந்தும் சுற்றுச்சூழல் சட்டங்களுக்கு இணங்கி இருக்கிறோம் மற்றும் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்க நிறுவனத்தின் சுற்றுச்சூழல் கொள்கைகளைச் செயல்படுத்துகிறோம்.

- சமூகங்கள்

Puig -இன் சமூகத்திற்காக அர்ப்பணிக்கும் பாரம்பரியத்தை நிலைத்திருக்க தீர்மானத்துடன் உள்ளோம்.

இக்குறியீட்டுடன் இணக்கமாக இருக்கும் உள்ளூர் விதிகளை மதிக்கிறோம் மற்றும் நாங்கள் தொழில்புரியும் சமூகங்களின் நலனை மேம்படுத்த உழைக்கிறோம்.

பரஸ்பர நம்பிக்கை அடிப்படையில் எங்களது வணிகக் கூட்டாளர்களுடன் உறவுகளைப் பேணுகிறோம் மற்றும் நாங்கள் யாருடன் வணிகம் செய்கிறோம் என்பதை அவர்களது நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புள்ள வணிகத்தைக் கருத்தில் கொண்டு அவர்களைத் தேர்வு செய்கிறோம்.

நாங்கள் எல்லா விதமான குழந்தைத் தொழிலையும் நிராகரிக்கிறோம் மற்றும் அனைத்து மனித உரிமைகள் சட்டத்துடனும் கண்டிப்பாக இணங்குவதன் மூலம் மனித உரிமைகளுக்கு அர்ப்பணித்துள்ளோம்.

- சமூகத்திற்கு மதிப்பு உருவாக்குதல்

எங்களது தயாரிப்புகள் மூலமாகவும் மற்றும் எங்களது மக்கள் மூலமாகவும் சமூகத்திற்கு மதிப்பை உருவாக்குகிறோம்.

எங்களது வர்த்தக செயல்பாட்டையும் தாண்டி சமூகத்திற்குப் பங்களிக்க உறுதுபூண்டுள்ளோம் மற்றும் UN நிலைக்கத்தக்க வளர்ச்சிக் குறிக்கோள்களை நிறுவனத்தின் செயல்பாடுகளுடன் ஒருங்கிணைக்க உழைக்கிறோம், இதனால் நாங்கள் உருவாக்கும் மதிப்பைக் கண்காணிக்கவும், மதிப்பிடவும் மற்றும் தகவல்தொடர்பு கொள்ளவும் தேவையான கட்டமைப்பை அவர்களால் வழங்க முடியும்.

எங்கள் தயாரிப்புகள் நலன், தன்னம்ப்பிக்கை மற்றும் சுய-வெளிப்பாட்டை வளர்க்கிறது மற்றும் இதனால் சிறந்த உலகைக் கட்டமைக்க பங்களிக்கிறது. அவர்கள் பாதுகாப்பு, தரம் மற்றும் தொழிற்துறை தனிச்சிறப்பின் உயரிய தரநிலைகளைச் சந்திக்கிறார்கள் மற்றும் எங்களது சந்தைப்படுத்தல் சமூகத்தின் மீது அது கொண்டிருக்கக்கூடிய விளைவைக் கருத்தில் கொள்கிறது.

எங்கள் செயல்பாடுகள் சமூகத்தின் கொண்டிருக்கும் எந்தவொரு சாத்தியமான எதிர்மறை தாக்கத்தையும் அடையாளம் கண்டு, தாமதமின்றி தீர்வுகாண்பதை உறுதிபடுத்த நாங்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கிறோம்.

# அர்ப்பணிப்புகள்

## Puig மற்றும் மக்கள்

எங்கள் மக்கள்தான் எங்களது மிகவும் மதிப்புமிக்க சொத்து, Puig நோக்கம் மற்றும் மதிப்புகளுக்கான உங்களது உற்சாகம், திறமை மற்றும் அர்ப்பணிப்புதான் எங்களது குறிக்கோள்களை அடைவதற்கான விசை.

நாங்கள் உலகளாவிய மனித உரிமைகளையும் தனிப்பட்ட ஒருமைப்பாட்டையும் மதிக்கிறோம் மற்றும் பாதுகாக்கிறோம் மற்றும் மக்கள் தங்கள் முழு திறனையும் அடைவதற்கு ஏற்ற நிறுவனமாக Puig-ஐச் செய்ய அயராது உழைக்கிறோம்.

- பன்முகத் திறமை

திறமை வாய்ந்த ஊழியர்களைக் கவர்வது, வளர்ப்பது மற்றும் தக்கவைத்துக் கொள்வதன் முக்கியமான முக்கியத்துவத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம் மற்றும் பன்முகத் திறமை வணிகத்தின் ஒட்டுமொத்த அறிவாற்றலை அதிகரிப்பதாக நம்புகிறோம்.

திறன் மேலாண்மை தொடர்பான எங்களது செயல்முறைகள் வெளிப்படையாக, நேர்மையாக மற்றும் பாகுபாடின்றி இருக்கின்றன.

பணியமர்த்தும் செயல்முறைகள் தேர்வுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களின் பன்முகக் குழுவை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தேர்வு முடிவுகள் பன்முகத்தன்மை கொண்டுவரக்கூடிய கூட்டு மதிப்பைக் கருத்தில் கொண்டு வணிகத்தின் சிறந்த ஆர்வங்களின் பேரில் செய்யப்படுகின்றன.

வயது, சமூகப் பின்னணி, பாலினம், இனம், மதம், பாலியல் நோக்குநிலை அல்லது இயலாமை முதலிய பாதுகாக்கப்பட்ட பண்புகளின் அடிப்படையில் வேலைகளுக்கு அல்லது உள்நிறுவன வாய்ப்புகளுக்கு விண்ணப்பதாரர்களை நிராகரிப்பது பாகுபாடாகு மற்றும் இது பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

ஊழியர்கள் தொழில்ரீதியாக வளரவும் மற்றும் அவர்களது எதிர்கால வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்ளவும் அவர்களுக்கு திறன்களைக் கற்றுக்கொள்ளும் மற்றும் வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

- உள்ளடக்குதல் மற்றும் சமநிலை

Puig பணியிடத்தில் உள்ள கலாச்சாரம் உள்ளடக்கிய மற்றும் பாகுபாடு இல்லாத கலாச்சாரம் ஆகும், ஊழியர்கள் மதிப்புமிக்கவர்களாக, பங்களிக்கக்கூடியவர்களாக உணரச் செய்கிறது.

Puig ஊழியர்களாக, உள்நிறுவன வாய்ப்புகளுக்கு நமக்கு சமமான அணுகல் கொண்டுள்ளோம் மற்றும் உள்நிறுவன வாய்ப்புகள் தொடர்பான முடிவுகள் நபர்களின் செயல்திறன் மற்றும் ஆற்றல்வளத்தின் அடிப்படையில் நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் செய்யப்படுகின்றன.

செயல்திறனானது பாரபட்சமின்றி புறநிலையான வழியில் அளவிடப்பட்டு வெகுமதி அளிக்கப்படுகிறது.

HF செயல்பாட்டால் ஆதரிக்கப்படும் மேலாளர்கள் ஊழியர்களின் ஆற்றல்வளத்தை அடையாளம் காண்பதற்கும், அதனை அடைய அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கும் பொறுப்பாவார்கள்.

தவிர்க்கப்படுவதாக, தனிமைப்படுத்தப்படுவதாக அல்லது பங்களிக்க இயலாதவர்களாக ஊழியர்களை உணர வைக்கும் எந்தவொரு நடத்தையும் பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

- பணிபுரியும் நிலைமைகள்

Puig அனைவரும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தப்படுகின்ற பணியிடத்தை வளர்க்கிறது.

நாம் மரியாதையுடனும் அக்கறையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. துன்புறுத்தும், பயமுறுத்தும்

அல்லது அசிங்கப்படுத்தும் நோக்கத்துடன் வேண்டுமென்றே செய்யப்படும் செயல்கள் பொறுத்துகொள்ளப்பட மாட்டாது.

எந்த வகையான பாகுபாடு, பழிவாங்கள் மற்றும் துன்புறுத்தல், குறிப்பாக பணியிட அல்லது பாலியல் துன்புறுத்தல், பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

Puig நாம் இயங்கிவரும் நாடுகளில் உள்ள வேலை ஒழுங்குமுறைகளுடன் முழுமையாக இணங்குகிறது, மேலும் நாங்கள் அனைத்துப் பொருந்தும் சுகாதார மற்றும் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை அவதானிக்கிறோம் மற்றும் நம்மையோ, நம் சகப் பணியாளர்களையோ அல்லது நிறுவன இடங்களையோ ஆபத்திற்கு வழிவகுக்கும் அபாயங்களைத் தவிர்க்கிறோம்.

# அர்ப்பணிப்புகள்

## Puig மற்றும் வணிகம்

நாங்கள் பொருந்தும் சட்டங்களுடன் இணங்குகிறோம், வணின நெறிமுறைகளின் உயரிய தரநிலைகளின் சாம்பியன்.

- தகவல்களின் துல்லியத்தன்மை

நாங்கள் எவ்வித ஏமாற்றுதலையும் அல்லது உண்மையைத் தவறாக சித்தரிப்பதையும் தெரிந்தே செய்யவோ அல்லது மன்னித்துவிடுவதோ இல்லை.

நிறுவனத்தின் உள்ளேயும் வெளியேயும் பரப்பப்படும் அனைத்துத் தகவல்களும் துல்லியமாகவும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டும் இருக்க வேண்டும்.

விளம்பர நகல் மற்றும் தயாரிப்புத் தகவல்கள் வாடிக்கையாளர்களை ஏமாற்றும் எண்ணத்துடன் ஒருபோதும் எழுதிவைக்கப்படக் கூடாது.

- தரவுப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பு

நாங்கள் இயங்கிவரும் சந்தைகளில் உள்ள தனியுரிமை ஒழுங்குமுறைகளுடனும் தரவுப் பாதுகாத்தலுடனும் இணங்கியிருக்க அர்ப்பணித்துள்ளோம்.

சட்டப்பூர்வ நிறுவன செயல்பாடுகளுக்கு அவசியமான தரவை மட்டுமே சேகரிக்கிறோம் மற்றும் சேமிக்கிறோம்.

செயல்பாடுகளின் போது சேகரிப்பட்ட நிறுவனம் அல்லது மூன்றாம் தரப்பினர்களின் இரகசியத் தகவல்கள் பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் முறையாக சேமிக்கப்பட வேண்டும் மற்றும் தனிப்பட்ட நன்மைக்காக ஒருபோதும் வெளிப்படுத்தப்படவோ அல்லது பயன்படுத்தப்பட கூடாது.

எங்களது ஊழியர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர்களுடன் தொடர்புடைய அனைத்துத் தனிப்பட்ட தகவல்களின் இரகசியத்தன்மையையும் நாங்கள் பாதுகாக்கிறோம்.

பாதுகாப்பிற்கான எங்களது அர்ப்பணிப்பு என்பது குறைந்தபட்ச பாதுகாப்பு நிலையை உத்தரவாதம் அளிப்பதன் மூலம் எங்கள் தகவல் அமைப்புகளுக்கான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி, தடுத்து, பதிலளிப்பதே ஆகும். நாங்கள் நிர்வகிக்கும் தகவலின் இரகசியத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் கிடைக்கும்தன்மையைப் பாதுகாக அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகளை நாங்கள் செயல்படுத்துகிறோம்.

- நலன் முரண்பாடுகள்

நமது தனிப்பட்ட அல்லது நிதி ஆர்வங்கள் Puig உடன் முரண்படும் நலன் முரண்பாடுகளைத் தவிர்க்க நாம் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும், மேலும் அத்தகைய சூழ்நிலை நிகழ்ந்தால், உண்மைகளை முழுவதுமாக உடனடியாக மேலாளரிடம் தெரிவிக்க வேண்டும்.

நமது சொந்த ஆதாயத்திற்காகவோ அல்லது குடும்பம் அல்லது நண்பர்களின் ஆதாயத்திற்காகவோ நிறுவனத்தின் தகவல் அல்லது சொத்தை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது, ஒருபோதும் பணியமர்த்தல் மற்றும் தேர்வு செயல்முறைகளில் குடும்பம் அல்லது நண்பர்களின் நன்மைக்காக செல்வாக்கு செலுத்தக்கூடாது மற்றும் நமது சுதந்திரம் அல்லது நேர்மைக்கு பங்கம் விளைவிக்கும் பரிசுகளை ஏற்கக்கூடாது.

சப்ளையர்கள், ஆணையங்கள் மற்றும் பிற ஏஜன்சிகளைத் தேர்வு செய்வதற்கு மற்றும் உடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நிறுவப்பட்ட நடைமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

நாம் எல்லா நேரங்களிலும் நிறுவனத்தின் ஆர்வங்கள்படி நடந்துகொள்ள வேண்டும், சாத்தியமான நலன் முரண்பாடுகளை உடனடியாகப் புகாரளிக்க வேண்டும்.

- நிறுவன வளங்கள்

நிறுவன வளங்கள் முறையாகவும் பொறுப்பாகவும் அவை உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களுக்காக உகந்த நிலைமைகளில் பராமரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். மூன்றாம் தரப்பினர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வழியில் ஒருபோதும் பயன்படுத்தபடக்கூடாது.

- கொடுப்பனவுகள் மற்றும் சட்டத்திற்கு விரோதமான பரிவர்த்தனைகள்

எந்த வகையாக ஊழல் நடத்தை, நடைமுறை அல்லது விதமும் தடைசெய்யப்படுகிறது.

வணிகம் அல்லது பிற ஆதாயங்களைத் தனியார் மூன்றாம் தரப்பினர்களுக்கு பொது நிர்வாக உறுப்பினர்களுக்கு அளிக்கவோ அல்லது அவர்களிடமிருந்து பெறவோ சட்டவிரோதமாகப் பெறுவதற்கு அல்லது பராமரிப்பதற்காக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, ரொக்கம் அல்லது அதை ஒத்த கொடுப்பனவுகள் அல்லது வேறு எந்த விதமான ஊதியம், நியாயமற்ற ஆதாயங்கள் அல்லது நன்மைகளை வழங்கவோ பெறவோ கூடாது.

சாத்தியமான சட்டவிரோதமான இடங்களில் கொடுப்பனவுகள் அல்லது சரக்குகளை ஏற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

- சந்தை நெறிமுறைகள்

எங்கள் போட்டியாளர்கள் உட்பட சந்தையிடத்தில் இருக்கும் மற்ற நிறுவனங்களை நாங்கள் மதிக்கிறோம். நாங்கள் நேர்மையான போட்டியைக் கடைபிடிக்கிறோம் மற்றும் எந்த வகையான தவறாக வழிநடத்தும், மோசடியான அல்லது தீங்கான நடத்தையையும் கண்டிக்கிறோம்.

எங்கள் செயல்பாடு அனைத்துப் பொருந்தும் பொது சுகாதார ஒழுங்குமுறைகளுடனும் இணங்குகிறது.

நாங்கள் தொழிற்துறை சொத்து, ஆசிரியர் உரிமைகள் மற்றும் அறிவுசார் சொத்தை மதிக்கிறோம்.

பாதுகாக்கப்பட்ட மூன்றாம்-தரப்பு பொருட்கள் அல்லது சரக்குகள் அவர்களின் உரிமையாளர்களது அங்கீகாரம் இல்லாமல் பயன்படுத்தப்படுவது வெளிப்படையாக தடைசெய்யப்படுகிறது.

Puig-க்கு சொந்தமான எந்தப் பொருட்களும் அல்லது சரக்குகளும் நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்ட எந்த நோக்கத்திற்காக தவிர வேறு எதற்கும் பயன்படுத்தப்படக்கூடாது.

- நற்பெயர்

நிறுவனத்தின் நற்பெயருக்கு நாம் கூட்டாக பொறுப்பாவோம்.

முன்கூட்டிய அங்கீகாரமின்றி நிறுவனத்தின் பெயரில் Puig உடன் தொடர்புடைய எவரும் கருத்துக்களை வெளிப்படுத்தவோ அல்லது நடந்துகொள்ளவோ கூடாது.

- வரி இணக்கம்

நாங்கள் இயங்கிவரும் சட்ட எல்லைக்குள் செலுத்தப்படும் வரிகள் அந்தச் சமூகங்களின் நிலைக்கத்தக்க வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்கிறோம்.

சட்டக் கட்டமைக்கான மேலும் வரிகளைச் செலுத்த Puig பொருந்தும் வரி விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணங்க மேற்கொள்கிறது. எங்கள் பரிவர்த்தனைகள் எப்போது வணிகத்தால் இயக்கப்படுகின்றன மற்றும் Puig இயங்கும் சந்தைகளில் வரி முடிவுகளின் சாத்தியமான தாக்கத்தைக் கருத்தில் கொள்கிறது.

தேவைக்கேற்ப ஆணையங்களுடன் ஒருங்கிணைக்கவும் மற்றும் வெளிப்படையாக நடந்துகொள்ளவும் செய்கிறது.

- தெரிவிக்கும் நேர்மை

நாங்கள் அனைத்து நிதி மற்றும் நிதி-அல்லாத வெளிப்படுத்தல் மற்றும் தெரிவிக்கும் கடப்பாடுகளுடன் வெளிப்படையான நம்பகமான மற்றும் சரியான நேரத்தில் இணங்குகிறோம்.

# பயன்பாடு மற்றும் புகாரளிக்கும் சேனல்

Puig பொருந்தும் சட்டம் மற்றும் இக்குறியீட்டின் விதிமுறைகள் மற்றும் அதன் தொடர்புடைய கொள்கைகளுடன் இணங்கவும் மற்றும் நிறுவனம் முழுவதிலும் இணங்கும் கலாச்சாரத்தை வளர்க்கவும் செய்கிறது.

வெளிப்படையான, நேரடி மற்றும் நேர்மையான உரையாடல் அன்றாட செயல்பாட்டின் போது எழக்கூடிய பல கேள்விகள் அல்லது கவலைகளைத் தீர்க்கும் என்று நம்புகிறோம். இருப்பினும், Puig ஓர் அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான தெரிவிக்கும் சேனலையும் வழங்குகிறது, இதனால் சாத்தியமான குறியீட்டு மீறல்கள் புகாரளிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ள முடியும்.

- இணக்கத்தின் தரநிலை

நிறுவனமானது இந்தக் குறியீட்டையும் மற்றும் இதன் தொடர்புடைய கொள்கைகளையும் அமல்படுத்தும், இதனால் விவரிக்கப்பட்டுள்ள அர்ப்பணிப்புகளும் கோட்பாடுகளும் நிறுவனத்தின் எல்லா மட்டங்களிலும் தொகுக்கப்படுகின்றன.

இந்த நெறிமுறைக் குறியீட்டுடன் இணங்கத் தவறுவது ஒழுங்கு நடவடிக்கைகளுக்கும் மற்றும் பிற சட்ட விளைவுகளுக்கும் வழிவகுக்கலாம்.

எச்சரிக்கை செய்தியைப் பெற்ற பிறகும், இக்குறியீட்டில் விவரிக்கப்பட்டுள்ள அர்ப்பணிப்புகள் மற்றும் கோட்பாடுகளை மீறும் நடத்தையைத் திருத்திக் கொள்ளாமல் இருக்கும் எந்தத் தரப்புடனும் எங்களது உறவை முறித்துக்கொள்ள பரிசீலிப்போம்.

மூன்றாம் தரப்பினர்களுடன் கையாளும் போது இக்குறியீட்டில் விவரிக்கப்பட்டுள்ள அர்ப்பணிப்புகளையும் கோட்பாடுகளையும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

- எவ்வாறு குறியீட்டைப் பயன்படுத்துவது

நமது வேலை சம்பந்தமான கேள்விகளுக்கு நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி நாம் கொண்டிருக்கும் எந்தவொரு கேள்விகளுக்கும் பதலளிக்கவும் மற்றும் Puig-இல் என்ன ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்குமான வழிகாட்டி இந்தக் குறியீடு.

இக்குறியீடானது நிறுவன இணையதளத்தில் www.Puig.com அனைத்து Puig ஊழியர்களுக்கும் கிடைக்கிறது மற்றும் குறியீட்டின் உள்ளடக்கம் தொடர்பான வழக்கமான பயிற்சியும் தகவல்தொடர்பு செயல்பாடுகளும் ஊழியர்களுக்கும் வணிகக் கூட்டாளர்களுக்கும் வழங்கப்படுகிறது

நமது சொந்த நடத்தைக்கு நாம் அனைவருமே பொறுப்பு. நீங்கள் குறியீட்டை வாசித்து, அது கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளையும் தரநிலைகளையும், அவை எவ்வாறு உங்களுக்கு தொடர்புடையது என்பதையும் புரிந்துகொண்டிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

நீங்களோ அல்லது வேறு எவறோ செய்து கொண்டிருக்கும் அல்லது செய்யத் திட்டமிட்டிருக்கும் செயல் Puig-இல் ஏற்கத்தக்கதா அல்லது இல்லையா என்பது குறித்து உங்களுக்கு உறுதியாகத் தெரிவில்லை என்றால், உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்:

- இது சட்டப்பூர்வமானதா?
- இது குறியீட்டின் கோட்பாடுகளுடன் ஒத்ததா?
- விளைவுகள் என்னவாக இருக்கும்?
- இது நிறுவனம், உங்கள் சகப் பணியாளர்கள், சுற்றுச்சூழல் அல்லது மூன்றாம் தரப்புக்கு ஆபத்தானதா?
- நேரடியாக ஈடுபடாத ஒருவருக்கு அது எதுவாக இருந்தாலும் அதைப் பாதுகாப்பதில் சௌகரியமாக இருப்பேனா?

இக்கேள்விகள் குறித்து உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், நீங்கள் முன்வந்து கூற வேண்டும், உங்கள் வரிசை அல்ல்து செயல்பாடு மேலாளர் அல்லது உங்கள் மனித வளங்கள் மேலாளரிடம் சிக்கலை எழுப்பவும்.

உங்கள் வணிக அலகில் குறைதீர்ப்பு நடைமுறை இருந்து, சிக்கல் முறையானதாக இருந்தால், இந்தச் சேனலைப் பயன்படுத்த நீங்கள் தேர்வு செய்யலாம்.

மாறாக, உங்கள் புகாரளிக்கும் மேலாளருக்கு அடுத்தபடியான வேறு ஏதேனும் மேலாளர் அல்லது பெருநிறுவன மனித வளங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

உங்கள் கவலையானது இயல்பான சேனல்களைப் பயன்படுத்தி அல்லது வேறு ஏதேனும் காரணத்தினாலோ கையாள முடியாது என்று நீங்கள் உணர்ந்தால், சிக்கலைப் புகாரளிக்க நீங்கள் எப்போதும் பாதுகாப்பான புகாரளிக்கு சேனலைப் https://Puigreportingchannel.ethicspoint.com/ பயன்படுத்தலாம்.

- பாதுகாப்பான புகாரளிக்கும் சேனல்

புகாரளிக்கும் சேனல் வழிமுறை இரகசியக்காப்பை உறுதியளிக்கிறது, அநாமதேய தன்மையை அனுமதிக்கிறது மற்றும் புகாரளிப்பவர்களைப் பழிவாங்கப்படுவதில் இருந்து பாதுகாக்கிறது.

புகாரளிக்கும் சேனல் வழியாக செய்யப்படும் எந்தவொரு புகாரும் நேரத்தில் கையாளப்படும்.

விசாரணையைப் பொறுத்த வரையில், செயல்முறையானது ஒரு சுயாதீனமான பாரபட்சமில்லாத அமைப்பால் வழிநடத்தப்படும், இது சிக்கலைத் துல்லியமாக பகுப்பாய்வு செய்து, எழுப்பப்பட்ட அனைத்துக் கவலைகளையும் உரைக்கும் தீர்வை வழங்கும். விசாரணைகள் பொருந்தும் உள்ளூர் சட்டத்துடன் இணங்கும்.

விசாரணையில் ஈடுபட்ட அனைவரும் விசாரிக்கும் அமைப்புடன் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

# மேலாளர்களின் பங்கு

மேலாளர்கள் இந்தக் குறியீடு சரியாகப் பயsன்படுத்தப்படுவதையும், குறியீட்டுக்கு ஆதரவாக அவர்களது குழுக்களில் அறநெறியான கலாச்சாரம் கட்டமைக்க உதவவுவதற்கும் உறுதிசெய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

**குறியீடு சரியாகப் பயன்படுத்தப்படுவதை எவ்வாறு மேலாளர்கள் உறுதிபடுத்த முடியும்?**

- மேலாளர்கள் குறியீட்டின் கோட்பாடுகளையும் தொடர்புடைய கொள்கைகளையும் அறிந்திருக்க வேண்டும், வணிகத்தில் அவர்களது பணிப்பகுதிக்கான தாக்கங்களைச் சிந்திக்க வேண்டும்.
- குறியீடு தொடர்பான சிக்கலுடன் ஓர் ஊழியர்கள் மேலாளரிடம் வந்தால், அது முன்னுரிமை அளித்து கையாளப்பட வேண்டும். மேலாளர்கள் கவனமாகவும் அக்கறையுடனும் கேட்டு தேவைப்படும் ஆதரவை வழங்க வேண்டும்.
- மேலாளர்கள் புது ஊழியர்களுக்கு குறியீட்டை விளக்க வேண்டும், அவர்களது பணிப்பகுதிகளில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டால், குறியீட்டுடன் தொடர்புடைய எந்தவொரு அம்சங்களையும் கவனமாக விளக்க வேண்டும்.

**மேலாளர்கள் அவர்களது அணிகளில் அறநெறியான இணக்கத்தின் கலாச்சாரத்தை எவ்வாறு கட்டமைப்பது?**

- தரநிலை அமைத்து, அவர்களது அணிகளுக்கு இணக்கத்தின் உதாரணமாக இருப்பதை உறுதிபடுத்துவதன் மூலமாக.
- அவர்களது அணிகள் குறியீட்டின் உள்ளடக்கத்தையும், அவர்களுக்குப் பொருந்தும் அனைத்துத் தொடர்புடைய கொள்கைகளையும் அறிந்திருப்பதையும் உறுதிபடுத்துவதன் மூலமாகவும் மற்றும் அவர்களுடன் வணிக நெறிமுறைகளின் சம்பந்தபட்ட சிக்கல்களை விவாதிப்பதன் மூலமும்.
- நிலையாக இருந்து, குறியீட்டுடன் இணங்காத நடத்தை ஒருபோதும் தவிர்க்காது, நபரின் இணக்கத்தின் உதாரணங்களைப் பாராட்டுவதன் மூலமாக.

# நெறிமுறைக் குறியீட்டின் சீராய்வு

இக்குறியீடானது செல்லுபடியாகும் மற்றும் சம்பந்தப்பட்டிருக்கும் காலம்வரையில் காலமுறையாக சீராய்வு செய்யப்படும்.

பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்ட குறியீட்டின் எந்தவொரு அம்சங்களிலும், Puig நிறுவனம், வணிகம் அல்லது பொருந்தும் சட்டத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப குறியீடு தழுவ வேண்டிய தேவை இருக்கும் போதெல்லாம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.